DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 143/2022 Crime No. 65/2022 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | PW-2 லட்சுமி | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 15.04.2025 |

**எதிரி ஆஜர்.**

முதல் விசாரணை

நான் குருவரெட்டியூரில் குடியிருந்துகொண்டு கூலி வேலை செய்துவருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்துவீட்டுக்காரர். அ.சா.1 எனது கணவர் ஆவார். தேதி மாதம் நினைவில்லை. கடந்த 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் விடியற்காலை சுமார் 01.30 மணியளவில் ஆஜர் எதிரி குடிபோதையில் வந்து எனது வீட்டிற்கு முன்பு உள்ள வீதியில் நின்றுகொண்டு தகாத வார்த்தைகளால் பேசிக்கொண்டிருந்தார். சத்தம் கேட்டு வெளியே வந்த எனது கணவர் அவரிடம் எதற்கு இப்படி பேசுகிறாய் என்று கேட்டதற்கு எதிரி தனது கையில் வைத்திருந்த கத்தியால் எனது கணவரை வெட்ட வந்தார். எனது கணவரின் சத்தம் கேட்டு நான் வெளியே வந்தபோது, எதிரி என்னையும் தகாத வார்த்தைகளால் திட்டி அதே கத்தியால் இடது கையில் வெட்டினார். எனது கணவருக்கு இடதுபக்க மண்டையில் பலத்த காயம் ஏற்பட்டது. எங்களின் இருவர் சத்தம் கேட்டு வீட்டிற்குள் இருந்து வெளியே வந்த எங்களது மகன் 108 அம்புலன்ஸ் மூலம் குருவரெட்டியூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். பின்னர், மேல்சிகிக்சைக்காக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அங்கு சிகிச்சையில் இருந்தபோது போலீசார் வந்து விசாரித்து சென்றனர். அங்கு ஒரு நாள் சிகிச்சையில் இருந்த நாங்கள் பின்னர், ஈரோடு மீனா பசுபதி மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு சுமார் 15 நாட்கள் உள்நோயளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டோம். நீதிமன்றத்தில் உள்ள கத்தியால் தான் எதிரி தன்னை வெட்டியதாக சாட்சி அடையாளம் காட்டுகிறார். கத்தி ஏற்கனவே அ.சா.பொ.1ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

எனக்கும் எதிரிக்கும் ரொம்ப காலமாக சொத்து தகராறு நடந்து வருகிறது என்றால் சரிதான். எங்கள் வீட்டை தாண்டித்தான் எதிரியின் வீட்டுக்கு செல்ல முடியும் என்றால் சரிதான். அந்த தடத்தில் கல், முள்ளு போட்டு நீங்கள் தடத்து எதிரிக்கு வழிவிடாமல் இருந்தீர்கள் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த நேரம் இரவு என்றால் சரிதான். எனது வீட்டுக்காரரின் சத்தம் கேட்டு நான் வெளியே வந்து பார்த்தேன் என்றால் சரிதான். நான் வெளியிலிருந்து பார்க்கும்போது அவருக்கு

அடிபட்டு இருந்தது என்றால் சரிதான். எனது மகனும் அடிபட்ட பின்பு சத்தம் கேட்டுதான் வெளியே வந்தார் என்றால் சரிதான். அ.சா.பொ.1 க்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. தான் அ.சா.பொ.1யை யார் காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்கள் என்றால் எதிரி என்னை வெட்டிவிட்டு கத்தியை அங்கேயே போட்டுவிட்டு சென்றுவிட்டார். நான் அதனை எடுத்து வீட்டினுள் வைத்தேன். பின்னர், மருத்துவமனையில் போலீசாரிடம் ஒப்படைத்தேன். இரவு நேரத்தில் எதிரி தகாத வார்த்தைகாளல் பேசினார் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீங்களும் உங்களது கணவர் அ.சா.1 எதிரியின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து தகாத வார்த்தையால் பேசினீர்கள் என்றால் சரியல்ல. அதிலிருந்து தப்பிப்பதற்காகவும், நீங்கள் போட்டு வைத்திருந்த முள் மற்றும் கம்பியிலும் இரவு நேரத்தில் தெரியாமல் விழுந்து காயம் ஏற்படுத்திகொண்டீர்கள் என்றால் சரியல்ல. அங்கு முள்ளும் கம்பியும் இல்லை. அது தார் ரோடு. எதிரிதான் அ.சா.பொ.1ஆல் வெட்டினார். உங்களுக்கும் எதிரிக்கும் உள்ள இடப்பிரச்சனை சம்பந்தமாக உங்களது கணவர் பொய்யாக புகார் அளித்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி உங்களை கத்தியால் வெட்டவும் இல்லை என்றாலும், தகாத வார்த்தையால் பேசவில்லை என்றாலும் சரியல்ல.

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.